மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.111/2023</u>

2026ம் ஆண்டு ஜனவரி 23ம் நாள் வெள்ளிக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்லமுத்து | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>23.01.2026 வா.சா.2 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் 155 பி வெள்ளகோவில், இந்திரா நகர் என்ற முகவரியில் வசித்து வருவதை காட்ட என்னிடம் ஆவணங்கள் ஏதேனும் உள்ளதா என்றால் ஆவணங்கள் இல்லை பெரியம்மா வீட்டில் நான் இருந்து வருகிறேன். இந்த வழக்கில் பிரதிவாதிகள் வெள்ளகோவில் விலாசத்தில் வசித்து வருகிறார்கள் என்றால் இல்லை. அவர்கள் பூர்வீகம் கணபதி பாளையம். இந்த வழக்கின் அழைப்பாணை பிரதிவாதி சேதுபதி என்பவருக்கு வெள்ளகோவில் முகவரிக்கு தான் சார்வாகியுள்ளது என்றால் 3ம் பிரதிவாதி இருக்கும் விலாசம் எனக்கு தெரியாது. நான் பெரியம்மா என்று சொல்வது காலம் சென்ற மரகதம் என்பவர் என்றால் சரிதான். நான் மேற்படி மரகதம் என்பவரோடு வசித்து வந்தேன் என்பதற்கான ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் ஆமாம் எனக்கு ஆதார் அட்டை மற்றும் குடும்ப அட்டை ஆகியவை

உள்ளது என்றால் ஆமாம். அவைகள் எந்த முகவரியில் உள்ளது என்றால் தற்போது அவை ஒட்டன்சத்திரம் வட்டம், சத்திரப்பட்டி விலாசத்தில் உள்ளது.

2. நான் இந்த வழக்கிற்காக வெள்ளகோவில் இந்திரா நகர் கதவு எண்.155 பி விலாசத்தில் வசித்ததாக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வெள்ளகோவில் இந்திரா நகர் கதவு எண் 155 பி என்ற விலாசத்தில் 3 ம் பிரதிவாதி தான் வசித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. வெள்ளகோவில் இந்திரா நகர் கதவு எண் 155 பி என்ற விலாசத்தில் உள்ள சொத்துக்களை பொறுத்து எனக்கு யாரும் உரிமை ஆவணங்களை ஏற்படுத்திக் கொடுக்கவில்லை என்றால் சரிதான். ஆனால் வாய்மொழியாக என் பெரியப்பாவும், பெரியம்மாவும் அவர்களது இறப்பிற்கு பின்பு என்னை அனுபவித்துக் கொள்ள சொல்லி உள்ளார்கள்.

3. தாவா சொத்துக்களை என் பெரியப்பாவும் பெரியம்மாவும் என்னை அனுபவித்துக் கொள்ள சொன்னார்கள் என்று நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் காலம் சென்ற ராஜரத்தினம் என்பவருக்கு சுயார்ஜிதமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். ராஜரத்தினத்தின் மனைவி பெயர் மரகதம் என்றால் சரிதான். ராஜரத்தினம் மற்றும் மரகதம் தம்பதியினருக்கு குழந்தைகள் எதுவும் இல்லை என்றால் சரிதான். ராஜரத்தினமும் அவரது மனைவி மரகதமும் இறக்கும் வரை நேசமாகத்தான் இருந்தார்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் ராஜரத்தினம் மற்றும் மரகதம் உயிரோடு இருந்த காலத்திலேயே 6

வீடுகள் கட்டி வாடகைக்கு விட்டு அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான்.

4. ராஜரத்தினம் எனது தகப்பனார் சிகாமணி என்பவரின் ஒரு உடன் பிறந்த சகோதரர் என்றால் ஆமாம். என் தகப்பனார் இல்லாமல் ராஜரத்தினத்தோடு 5 பெண் மக்கள் பிறந்துள்ளார்கள் என்றால் 3 பெண் மக்கள் உள்ளது எனக்கு தெரியும் மற்ற விவரங்கள் தெரியவில்லை. ராஜரத்தினம் தனக்கு குழந்தை இல்லாததால் என்னையும் என் சகோதரர்களையும் தத்து எடுத்து வளர்த்து வந்தார் என்பதை காண்பிக்க நான் ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆவணங்கள் எதுவும் இல்லை. என்னை என் பெரியப்பா தான் படிக்க வைத்தார். ராஜரத்தினம் கடந்த 26.02.2015 தேதியில் மொத்தம் 6 உயில்கள் ஏற்படுத்திக் கொடுத்தார் என்றால் சரிதான்.

5. அதில் முதல் உயில் தன் மனைவி மரகதம் பெயருக்கும், 2 வது உயில் ரங்கநாதன் என்பவருக்கும், 3 வது உயில் நாகராஜன் என்பவருக்கும், 4 வது உயில் செல்லம்மாள் என்பவருக்கும், 5 வது உயில் சரவணன் என்பவருக்கும், 6 வது உயில் வீரமுத்து என்பவருக்கும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதில் ரங்கநாதன், நாகராஜ், வீரமுத்து ஆகியோர்கள் இந்த வழக்கில் 2 முதல் 4 பிரதிவாதிகளாக உள்ளார்கள் என்றால் சரிதான். ராஜரத்தினம் எனக்கு எந்த விதமான உயில் சாசனம் எழுதிக் கொடுக்கவில்லை என்றும் எனக்கு சொத்துக்கள் எதையும் அவர் ஆவணத்தின் அடிப்படையில் பாத்தியப்படுத்தவில்லை என்றும் சொன்னால் என்னை படிக்க வைத்ததால் அவர் எனக்கு சொத்து இல்லை என்றும் எனது

பெரியம்மா இறந்த பிறகு அவருக்கு கொடுத்துள்ள சொத்தை என்னை எடுத்துக்கொள் என்றும் சொன்னார்.

6. நான் என் பெரியம்மா இறந்த பிறகு அவருக்கு உயில் மூலம் கொடுத்துள்ள சொத்தை என்னை எடுத்துக் கொள்ளுமாறு என் பெரியப்பா என்னிடம் சொன்னதாக வழக்குக்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என் பெரியப்பா அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து அவரது மனைவி மரகதம் என்பவருக்கு ஏற்படுத்தி கொடுத்துள்ள உயில் சாசனத்தை தவிர பிற நபர்களுக்கு ஏற்படுத்தி கொடுத்த உயில் சாசனத்தில் கண்டுள்ள சொத்துக்களை மரகதத்தின் ஆயுளுக்குப் பின்பு முழு உரிமையுடன் அடைந்து கொள்ள கண்டு தான் மேற்படி ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியவில்லை. மரகதத்திற்கு ராஜரத்தினம் ஏற்படுத்திக் கொடுத்துள்ள உயில் ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்களை பொறுத்து மரகதத்திற்கு முழு உரிமை கொடுத்து அந்த ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

7. மரகதம் அவரது கணவர் ராஜரத்தினம் இறந்த பிறகு தாவா சொத்தான கதவு எண். 155 பி மற்றும் அதனுடன் இணைந்த சொத்துக்களை முழு உரிமையுடன் அடைந்து அனுபவம் செய்து வந்தார் என்றால் அது எனக்கு தெரியவில்லை. ராஜரத்தினம் இறந்ததற்கு பின்னிட்டு மரகதம் எத்தனை ஆண்டுகள் உயிரோடு இருந்தார் என்றால் ராஜரத்தினம் 05.08.2015 தேதியில் இறந்து விட்டார். அதற்கு பின்னிட்டு மரகதம் 16.04.2022 தேதியில் இறந்துவிட்டார். மரகதம், தேவராஜ், வீரமுத்து மற்றும் நாகராஜ்,

ரங்கநாதன் ஆகியோர்கள் ராஜரத்தினம் ஏற்படுத்திக் கொடுத்த 6 உயில் சாசனங்களிலும் மாறி மாறி சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். ராஜரத்தினம் இறந்ததற்கு பின்னிட்டு அவர் ஏற்படுத்திக் கொடுத்த 6 உயில் சாசனங்களும் நடைமுறைக்கு வந்து செயல்பாட்டில் இருந்து வந்தது என்றால் சரிதான்.

8. கதவு எண்.155 பி–ல் மரகதம் குடியிருந்து வந்தார். அவரோடு நானும் இருந்து வந்தேன். மற்ற வீடுகளை வாடகைக்கு விட்டு அந்த வாடகை பணத்தை வாங்கி மரகதம் சாப்பிட்டு வந்தார். மரகதம் தான் உயிரோடு இருந்தபோது இந்த வழக்கின் 2 முதல் 4 வாதிகளுக்கு எதிராக தன் கணவர் உயில்மூலம் எழுதிக் கொடுத்த வீடுகளில் உள்ள வாடகை பணத்தை தான் பெற்று அனுபவம் செய்து வருவதை இடைஞ்சல் செய்யக்கூடாது என கேட்டு அ.வ.எண். 42/2016 என்ற வழக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார் என்றால் வழக்கு போட்டிருந்த விபரம் தெரியும் என்ன பிரச்சனைக்காக வழக்கு போட்டிருந்தார் என்று எனக்கு தெரியவில்லை. அந்த வழக்கு எனது உதவியால் தாக்கல் செய்யப்படவில்லை மரகதமே அந்த வழக்கை தாக்கல் செய்தார் என்றால் 2ம் பிரதிவாதி உதவியால் அந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

9. நான் மேற்படி வழக்கின் விபரங்கள் குறித்து நான் எதுவும் தலையிட்டுக் கொள்ளவில்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியை பைசலுக்கு அழைத்து அவர் வரவில்லை. நான் 2 முதல் 4 வாதிகளுக்கும் காலம் சென்ற மரகதத்திற்கும் இடையே சமரசம் செய்து வைக்க எவ்வித முயற்சியும் செய்யவில்லை என்றால் பெரியம்மாவோடு அனைவரும் நேசமாக இருந்ததால் நான் போகவில்லை. அந்த

வழக்கில் 2 முதல் 4 வாதிகள் தனியாக வழக்கறிஞர் வைத்து வாதத்தை போட்டிருந்தார்கள் என்றால் தெரியவில்லை. என் பெரியம்மா காலமாகும் வரை மேற்படி வழக்கு நிலுவையில் இருந்து வந்து அவர் காலமானதற்கு பின்னிட்டு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். மேற்படி மரகதம் தாக்கல் செய்திருந்த வழக்கில் 2 முதல் 4 வாதிகள் தாங்கள் எந்த இடைஞ்சலும் மரகதத்திற்கு செய்யவில்லை என்று எதிர்வாதம் செய்தார்கள் என்றால் அது எனக்கு தெரியவில்லை.

10. மரகதம் 23.08.2016 தேதியில் தனது கணவரால் தனக்கு முழு உரிமையுடன் கொடுக்கப்பட்ட சொத்துக்களை பொறுத்து இந்த வழக்கின் 3ம் பிரதிவாதிக்கும் பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணத்தின் மூலம் பாத்தியப்படுத்தியுள்ளார் என்று சொன்னால் மரகதம் எந்த உயில் ஆவணத்தையும் எழுதிக் கொடுக்கவில்லை. அந்த உயில் ஆவணம் பிரதிவாதிகளால் தயார் செய்யப்பட்ட ஆவணம். 3ம் பிரதிவாதி சேதுபதி என்பவர் மரகதம் என்பவரின் சகோதரரின் பேரன் முறை ஆவார் என்றால் சரிதான். மேற்படி 23.08.2016 தேதியிட்ட உயில் சாசனம் ஏற்படுத்தப்பட்ட விபரம் ஏற்படும் தேதியிலேயே எனக்கும் 2 முதல் 4 வாதிகளுக்கும் தெரிந்ததால் தான் நாங்கள் மரகதத்தோடு மனவிரோதம் கொண்டு பிரச்சனை செய்தோம் என்றும் மரகதத்தை பராமரிக்காமல் விட்டு விட்டோம் என்று சொன்னால் சரியல்ல.

11. 2016 ஆம் ஆண்டு 3ம் பிரதிவாதிக்கு மரகதம் உயில் சாசனம் ஏற்படுத்திக் கொடுத்த விபரம் தெரிந்துதான் 2 முதல் 4 வாதிகள் மரகதத்தை சொத்தை அனுபவம் செய்ய விடாமல் தடுத்தார்கள் என்றும் அதனால் தான் மரகதம் இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.42/2016 என்ற வழக்கை தாக்கல் செய்தார் என்றும் சொன்னால் சரியல்ல. மரகதம்

என்பவருக்கு மேற்படியாரின் கணவரான ராஜரத்தினம் என்பவரால் முழு உரிமையுடன் உயில் சாசனத்தின் மூலம் பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து ஆவணம் ஏற்படுத்திக் கொடுக்க முழு உரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல. மரகதம் தான் நல்ல தெளிவான மனநிலையில் இருந்த 2016ம் ஆண்டு அவருக்கு உயில் மூலம் பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து 3ம் பிரதிவாதிக்கு சாட்சிகள் முன்னிலையில் உயில்சாசனம் எழுதி பதிவு செய்து பாத்தியப்படுத்தியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

12. மரகதத்திற்கு மனநிலை சரியில்லாமலேயே இருந்தார் என்று நாங்கள் வழக்கிற்காக பொய்யாக கூறி உள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. மரகதத்திற்கு மனநிலை சரியில்லை என்பதற்கான ஆவணங்களோ மருத்துவ சான்றிதழ்களோ எங்கள் வசம் இல்லை என்று சொன்னால் இருந்தது நீண்ட நாள் ஆனதால் காணாமல் போய்விட்டது. மரகதம் நல்ல மனநிலையில் இருந்து தான் சொத்துக்களை அனுபவம் செய்து வந்து வாடகையை வாங்கி அனுபவம் செய்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதி தான் மரகதத்தை மிரட்டி வாடகை வாங்கி அனுபவித்து வந்தார். சொத்துக்களை பொறுத்த அசல் மூலப்பத்திரங்கள் மரகதம் வசம் தான் இருந்தது என்றால் எங்கள் பெரியப்பா இறந்ததற்கு பின்பு அசல் ஆவணங்கள் மரகதத்திடம் இருந்தது.

13. 2 முதல் 4 வாதிகள் பெயரில் ஏற்படுத்தி வைக்கப்பட்ட உயில் சாசனத்தையும் மரகதம் இறந்ததற்கு பின்னிட்டு தான் 2 முதல் 4 வாதிகள் பெற்றுக் கொண்டார்கள் என்றால் சரிதான். அசல் உயில் ஆவணங்களை 2ம் பிரதிவாதி வீட்டில் இருந்து எடுத்துச் சென்று

தான் அ.வ.எண்.42/2016 வழக்கை தாக்கல் செய்துள்ளார். நான் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மரகதம் 3ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்தி கொடுத்துள்ள உயில் ஆவணத்தை நான் பார்த்துள்ளேன் என்றால் அது போர்ஜரியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்னிடம் காட்டப்படவில்லை.

14. 3ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட உயில் ஆவணத்தை நான் பார்வையிடாமல் எனக்கு வாய்மொழியாக கொடுத்த உரிமையின் அடிப்படையில் இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திக் கொடுத்த உயில் ஆவணத்தில் யார் யார் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. மரகதம் தான் இறக்கும் வரை நல்ல உடல் நிலையிலும் நல்ல மனநிலையிலும் திடகாத்திரமாக இருந்து வந்தார் என்றும் நான் வழக்கிற்காக அவர் மனநிலை சரியில்லை என பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. கதவு எண். 155 பி என்ற வீடானது தனியாக அமைந்துள்ளது என்றால் சரிதான். அதைத் தவிர உயில் சாசனத்தில் கண்டுள்ள மற்ற ஐந்து வீடுகளில் மூன்று வீடுகள் ஒன்றாகவும் இரண்டு வீடுகள் தனியாகவும் அமைந்துள்ளது.

15. மரகதம் ஏற்படுத்திக் கொடுத்த உயிலைப் பொறுத்து ஆட்சேபனை செய்ய எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மரகதம் ஏற்படுத்தி கொடுத்த உயில் ஆவணம் உண்மையானது என்றும் அது நடைமுறைக்கு வந்து 3ம் பிரதிவாதி சேதுபதி மேற்படி உயில் சொத்தில் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. நான் தான் அனுபவத்தில் இருந்து

வருகிறேன். நான் தாவா சொத்தான கதவு எண்.155 பி–ல் குடியிருந்து வருவதற்கு ஏதாவது ஆவணங்களை வைத்துள்ளேன் என்றால் இல்லை. கதவு எண்.155 பி வீட்டை பொறுத்த வீட்டு வரி, மின் இணைப்பு, பட்டா ஆகியவை 3ம் பிரதிவாதி சேதுபதி பெயரில் மாற்றம் செய்யப்பட்டு அவரால் அனுபவம் செய்யப்பட்டு வருகிறது என்றால் மரகதத்தின் பெயரில் உள்ள உயிலை 3ம் பிரதிவாதி பெயருக்கு மாற்றிவிட்டு அதன் பின்னிட்டு வருவாய்த்துறை ஆவணங்களை மாற்றம் செய்துள்ளார்கள்.

16. 2ம் பிரதிவாதி முதலமைச்சரின் தனி பிரிவிற்கு புகார் கொடுத்து அது சம்பந்தமாக வெள்ளகோவில் காவல் நிலையத்தில் விசாரிக்கப்பட்டது என்றால் அது சம்பந்தமாக 2 முதல் 4 வாதிகள் அழைத்ததன் பேரில் நான் பைசல் செய்து வைக்க சென்றேன். நானும் என் சகோதரர்களான வாதிகளும் ஒன்று சேர்ந்து கொண்டு வழக்குச் சொத்தினை பிரதிவாதிகளிடம் இருந்து பறிக்க வேண்டும் என்பதற்காக திட்டமிட்டு 23.08.2016 தேதியிட்ட உயில் ஆவணத்தை மறுத்து பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

17. எங்களுக்கும் இந்த வழக்கு சொத்திற்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை என்றும் படிப்பறிவில்லாத பிரதிவாதிகளிடமிருந்து சொத்துக்களை அபகரிக்க பொய்யாக வழக்கு தாக்கல் செய்து உள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் 23.08.2016 தேதியிட்ட உயில் ஆவணத்தின் அடிப்படையில் 3ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு அவரது தனிப்பட்ட சுவாதீனம் மற்றும் அனுபவத்தில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல.

எங்களுக்கு வழக்குச் சொத்தில் எந்த விதமான உரிமையும் அனுபவமும் எப்போதும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.01.23 18:15:57 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்